Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
(சி-068)
☎ 021-222517

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 02 (08.11.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 39

# பிரபா மீதான தீர்ப்பைக் கண்டித்து

# இன்று பல்லாயிரம் மக்கள் பேரணி!

## அரசுக்கும் சர்வதேசத்துக்கும் ஒரே குரலில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவர்!

(யாழ்ப்பாணம்)

**தேசியத்தலைவர் வே.பிரபாகரன் மீது - மேல் நீதிமன்றம் 200 வருட சிறைத் தண்டனையைத் தீர்ப்பாக அளித்தமையைக் கண்டித்து தமது எதிர்ப்பையும், விசனத்தையும் வெளிப்படுத்துமுகமாக யாழ். மாவட்டத்தில் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் திரளும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது. பேரணியின் இறுதியில் பிரதமருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.**

தமிழீழத் தேசியத் தலைவர் மீதான நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து ஆயிரக்கணக்கான மக்கள் திரளும் மாபெரும் கண்டனப் பேரணி இன்று காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பொது அமைப்புக்கள் இப்பேரணி நடைபெறுவதற்கான ஆதரவினை வழங்கி வருகின்றன. கிராம ரீதியாக மக்கள் பங்கு கொள்ள ஏற்ற ஏற்பாடுகளையும் பொது அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன. (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதிக்கடன் 2500 பேருக்கு மீளளிப்பு!

(யாழ்ப்பாணம்)

**விபரங்கள் உள்ளே...**

தமிழீழ மீட்புநிதிக்கடன் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்தவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட இரண்டாயிரத்து ஐந்நூறு பேரின் கடன் இம்மாதம் 21ம்திக்தி முதல் 24ஆம் திகதி வரை மீளளிக்கப் படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார். கடன் மீளளிப்புப் பெறுவோரின் விபரங்கள் உள்ளே பிரதேச செயலர் பிரிவு ரீதியாகப் பிரசுரமாகியுள்ளன.

## ஐப்பானிய தூதரகக் குழு முகமாலைக்கு விஜயம்

(மீசாலை)

தென்மராட்சியில் உள்ள முன்னரங்கப் பகுதிகளுக்கு நேற்று ஜப்பானியத் தூதரக அதிகாரிகள் விஜயம் செய்தனர். முகமாலை மற்றும் சரசாலையில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் ஆகியவற்றுக்கு இவர்கள் சென்றனர்.

இக்குழுவில் இலங்கைக்கான ஜப்பானிய உயர்ஸ்தானிகர், இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர். இக்குழுவினர் இரண்டு பஸ்களில் அழைத்து வரப்பட்டிருந்தனர். இவர்களுடன் தென்மராட்சி பிரதேச செயலக அதிகாரிகளும் வந்திருந்தனர். (25)

## தீர்ப்பை உடன் விலக்குக! கல்விச் சமூகம் கோரிக்கை!!

### ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

தலைவர் பிரபாகரனுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்புக்குக் கண்டனம் தெரிவித்து கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கு நீதிமன்றம் விதித்துள்ள 200 ஆண்டுச் சிறைத்தண்டனைச் செய்தி தமிழ் நெஞ்சங்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. புரிந்துணர்வு அடிப்படையில் சமாதானப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைவதற்காக சரணடைந்த ராணுவச் சிப்பாய்!

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியா அரசியற்துறை செயலகத்திற்கு நேற்றுமுன்தினம் இராணுவச் சிப்பாய் ஒருவர் சென்று புலிகளுடன் இணையத் தமது விருப்பத்தைத் தெரிவிததுச் சரணடைந்தார்.

அநுராதபுரம் நொச்சியாகம என்ற இடத்தைச் சேர்ந்த 28 வயதான முதியான்சலாகே இந்திக திஸ்ஸநாயக்க என்பவரே இவ்வாறு புலிகளுடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளவராவார். இவர் பத்து வருடங்களாக இராணுவ சமிக்ஞைப் பிரிவில் பணியாற்றியவர்.

நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணியளவில் மட்டக்களப்பிலிருந்து வந்து சரணடைந்த மேற்படி சிப்பாய் தான் இராணுவத்திற்கும் செல்ல விரும்பவில்லை, சொந்த இடத்திற்கும் செல்ல விருப்பமில்லை. விடுதலைப் புலிகளின் அமைப்பில் இணைந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத் திட்ட அறிக்கையை இரகசிய பெட்டியில் வைக்கவில்லை

### விமல் வீரவன்சவின் குற்றச்சாட்டு

(கொழும்பு நிருபர்)

நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்றுமுன்தினம் சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டம் இரகசியப் பெட்டகத்துக்குள் இருந்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வழமையாக வரவு செலவுத் திட்ட அறிக்கை இரகசிய பெட்டகத் (12ஆம் பக்கம் பார்க்க)



தாய்லாந்திலிருந்து வன்னி வந்திறங்கிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகியோரைப் படங்களில் காணலாம். (படங்கள்: விதுர்ஷன்)

### விண்ணானம் விநாசியர்



இனி சரண்டர் பண்ணிறவைக்கும் சேர்த்தெல்லோ ஆட்சேர்ப்பு நடத்த வேணும்...

### ரெலிகிராப் நிருபருக்கு விசா வழங்க மறுப்பு

(கொழும்பு)

'லண்டன் டெயிலி ரெலிகிராப்' பத்திரிகையின் கொழும்புச் செய்தியாளரான போல் ஹரிசுக்கு வதிவிட விசாவை வழங்குவதற்கு வெளிநாட்டு அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இவர் இலங்கையில் தங்கியிருப்பதற்கான விசாவை நீடிப்புச் செய்ய முயன்றபோது அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## லண்டனில் பாலசிங்கத்துடன் அரசியல் தீர்வு பற்றிப் பேச்சு!

### கொழும்பில் அமைச்சர் பீரிஸ் தகவல்



(கொழும்பு)

எதிர்காலத்தில் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நடந்து முடிந்துள்ள பேச்சுவார்த்தைகள் திருப்தியானதாக அமைந்துள்ளதால் அரசியல் பிரச்சினைகள் குறித்து எதிர்காலத்தில் பேச்சு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்கள் லண்டனில் நடத்தப்படும். தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படும். அரசாங்கத் தரப்பில் யார் இந்தப் பேச்சுக்களை நடத்துவார்கள் என்பது தீர்மானிக்கப்படவில்லை.

அரசியல் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்களின் போது வட. - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால (12ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB விமான சேவை
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் உள்ளது.
(சி-148)
CMB 505632 - 390128 - 517019

# தமிழ்ச்செல்வன், கருணா வன்னி வந்து இறங்கியபோது...







✦ நிரந்தர சமாதானத்தை நோக்கிய பேச்சுவார்த்தை,சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சித் தீர்வை வலியுறுத்தி
✦ அந்நிய நலன்களுக்கான தலையீடுகளை நிராகரித்து
✦ ஏகாதிபத்திய உலகமயமாதல்- தாராளமயம்- தனியார் மயத்தை எதிர்த்து
✦ உழைக்கும் மக்கள் மீதான சகல ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து
✦ அமெரிக்காவின் உலக ஆதிக்கப் போர் வெறியை அம்பலப்படுத்தி

**புதிய ஜனநாயக கட்சியின் 4வது தேசிய மாநாட்டையொட்டிய**

## பொதுக்கூட்டம்

இடம்:- யாழ்- சிற்றி ஹோல் மண்டபம்
(வின்சர் சந்திக்கு அருகாமையில் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை)
காலம்:- 09.11.2002 சனி பி.ப 3.30 மணிக்கு

**தலைமை:**
தோழர் சி.கா.செந்திவேல்
(பொதுச் செயலாளர், புதிய- ஜனநாயக கட்சி)

**உரையாற்றுவோர்:**

தோழர்கள்
❄ இ.தம்பையா - சட்டத்தரணி
(தேசிய அமைப்பாளர், புதிய ஜனநாயக கட்சி)
❄ சோ.தேவராஜா - சட்டத்தரணி
(அரசியல் குழு உறுப்பினர், புதிய ஜனநாயக கட்சி)
❄ க.தணிகாசலம்
(அரசியல் குழு உறுப்பினர், புதிய ஜனநாயக கட்சி)
❄ எஸ்.இராஜேந்திரன்
(மலையக பிரதேச செயலாளர், புதிய ஜனநாயக கட்சி)
❄ கா.கதிர்காமநாதன்
(வட பிரதேச செயலாளர், புதியஜனநாயக கட்சி)
❄ எஸ்.பன்னீர்செல்வம்
(மத்திய குழு உறுப்பினர், பு.ஜ.கட்சி மலையகம்)
❄ மு.தியாகராஜா
(புதிய ஜனநாயக கட்சி, வடபிரதேசம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம்
01.11.2002 (026) புதிய ஜனநாயக கட்சி

## புத்தகக்கண்காட்சியும் விற்பனையும்

இடம்:- புதிய உயர் கல்லூரி
காலம்:- 09.11.2002 - 13.11.2002
நேரம்:- காலை 9.00 - மாலை 4.00

❄ இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சகலதுறை சார்ந்த புத்தகங்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
❄ தொகையான புத்தகங்களை கொள்வனவு செய்யும் கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்களுக்கும் அதிவிசேட கழிவு
❄ வாசகர்கள் தேவையெனக் குறிப்பிடும் புத்தகங்கள் பெற்றுத் தரப்படும்

**புதிய உயர் கல்லூரி,**
**யாழ்,பேராதனை வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்,**
**ஆரியகுளம் சந்தி-யாழ்.**

(சி-164)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 - 02 - 1932 | 08 - 11 - 2000 |

### அமரர் திருமதி. சிவசுப்பிரமணியம் தெய்வானைஅம்மா

எங்கள் அன்பின் குலவிளக்காய் பாசத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எங்களை வழி நடத்திய பாசமிகு தாயே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவி நாச்சி அம்பாளை வேண்டுகின்றோம்

**உங்கள் பிரிவால் துயருறும்**
**கணவன், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

123, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம். (சி-161)

## புத்தகங்கள் அன்பளிப்பு

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்துக்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ரூபா 9ஆயிரம் பெறுமதியான ஒரு தொகுதி புத்தகங்களை வழங்கியுள்ளார்.

## திருடி அகப்பட்டவர் பொலிஸாரிடம் இருந்து தப்பினார்

(கரணவாய்)

விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட திருட்டுச் சந்தேக நபர் வழியில் அதிக சனநடமாட்டத்தைப் பயன்படுத்திப் பொலிசாரிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தீபாவளித் தினத்தன்று நெல்லியடி பிரதான நகருக்குள் சன நடமாட்டம் அதிகமாக இருந்தது. அதனைப்பயன் படுத்தி ஒரு பெணணின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்த போது பொலிசாரிடம் பிடிபட்ட நபரே பின்னர் தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (22)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள சவாரி மாடு (நாம்பன்) விற்பனைக் குண்டு. இறைச்சிக்காகக் கொடுக்கப்படமாட்டாது.
தொடர்பு-
பால்சாலை,
No:-21, கொழும்புத்துறைவீதி,
சுண்டுக்குளி,
(சி-155)

### ஒத்துமாறல்

கொழும்பு கல்வி வலயப் பாடசாலையில் ஆரம்ப ஆசிரியராக கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் யாழ்.கல்வி வலயத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புபவர்கள் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்
விளம்பர இல.03
C/O நமது ஈழநாடு,
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்


ஜொ.எகட்டனின் ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெசல்
சில்வர் ஸ்ரீக்
சிக்கன் புரியாணி
ரூபா 125/=
**ஜெசித்தாரா**
கண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
கண்டிக்குளி. (சி-163)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00
☛ சரத்குமார், ரோஜா, நடித்த
சின்னத்துரை
☛ சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
**"FINAL FIGHT"**
(கராட்டிப் படம்) (சி-139)

**ராஜா**
யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-151)


ஓம் முருகா

## தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயில் 2002-2003 ஆண்டிற்கான சில விசேட உற்சவ தினங்கள்

1) 10..11.2002 ஐப்பசி-24 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் "சூரசங்காரத் திருவிழா"
2) 11.11.2002 ஐப்பசி- 25 திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் " தெய்வயானையம்மன் திருக்கல்யாணத் திருவிழா"
3) 19.11.2002 கார்த்திகை-3 செவ்வாய்க்கிழமை மாலை 8 மணியளவில் "திருக்கார்த்திகைத் திருவிழா"
4) 21.12.2002 மார்கழி-6 சனிக்கிழமை காலை 8 மணியளவில் "திருவாதிரைத் திருவிழா"
5) 19.01.2003 தை- 5 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் "தைப்பூசத் திருவிழா"
6) 01.03.2003 மாசி- 1 சனிக்கிழமை இரவு 8 மணியளவில் "மகாசிவராத்திரி திருவிழா"
7) 14.04.2003 சித்திரை- 1 திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் "புதுவருடத் திருவிழா"

உற்சவகாலப் பூசகர்
ஸ்ரீ ஆறுமுகசாமி ஐயர்- சிவசண்முக ஐயர்

### முக்கிய அறிவித்தல்

**தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் முருகன் அடியார்களுக்கு!**

முருகன் அடியார்களாகிய நீங்கள் கொடுக்கும் நேர்த்திகளை கோயிலில் அமைந்திருக்கும் களஞ்சிய அறையில் அல்லது பூசகர்களிடம் மட்டும் சமர்ப்பிக்கவும்.

சிலர் பல ஊர்களில் உள்ள கடைகளிலும், வீடுகளிலும், அரச ஸ்தாபனங்களிலும் சென்று செல்வச்சந்நிதி கோயிலில் உள்ள பூசகர் எனக் கூறி அன்னதானம் பூசை என்றும் கோயில் திருப்பணி என்றும் நிதி சேகரிப்பதாக அறிந்துள்ளோம். எனவே சந்நிதி கோயில் நிர்வாக சபையினரால் ஒருவரையும் நிதி சேகரிக்க விடவில்லை என்பதனை தெரியப்படுத்துவதுடன், இங்கு மடம் நடாத்தும் சிலர் ஏழை மக்களுக்கு உணவு கொடுப்பதாகக் கூறி வெளிநாடுகளிலும் பணம் வசூலிப்பதாக அறிகின்றோம். இங்குள்ள இரு மடங்களில் அன்னதானத்திற்காக வழங்கப்படும் உணவு பணத்திற்கு விற்பனை செய்யப்படுகின்றது. சந்நிதி ஆலய வரலாற்றில் அன்னதானம் பணத்திற்கு விற்பனை செய்வது மிக அண்மைக்காலங்களில் தான் இடம் பெற்றுள்ளது. இதனை முருகன் அடியார்கள் தவிர்க்கவும்.

இங்குள்ள மடங்களுக்கும் கோயில் நிர்வாகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே ஊரில் உள்ள அடியார்களோ அல்லது வெளிநாட்டிலுள்ள அடியார்களோ கொடுக்கும் நிதிக்கு சந்நிதி கோவில் பூசகர்களோ அல்லது சபையினரோ பொறுப்பல்ல என்பதனை முருகன் அடியார்களுக்கு அறியத் தருகின்றேன்.

**இப்படிக்கு**
**2003-ம் ஆண்டுத் திருவிழா உரிமையாளரும்**
**நிர்வாகசபைத் தலைவருமாகிய**
**தங்கராசா ஐயர்- கனகேந்திரம் ஐயர்.**

(025)

## கூறுவிலை விற்பனை (Sealed Tenders)

### வடபிராந்திய போக்குவரத்து சபை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகளிலிந்து கழிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் கூறுவிலை விற்பனைக்காக கோண்டாவில், காரைநகர் சாலைகளில் விடப்பட்டுள்ளன.

பேருந்துகளின் அடிச்சட்டம், பின் முன் அக்சில்கள், பின் முன பிறேக்றம், வீல்றிம், சீற்பிறேம், அலுமினியம், உடைந்த வில்லுத் தகடுகள், இரும்பு வகைகள், ரயர்,ரியூப்,பிளப் ஆகிய பொருட்களாகும்.

மேலே கூறப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் 25.11.2002 இன் பின்னர் பலாலி வீதியில் அமைந்துள்ள வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையிலும் 11.11.2002 இன் பின்னர் காரைநகர் சாலையிலும் வேலை நாட்களில் (சனி,ஞாயிறு தவிர்ந்த) காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை பார்வையிட அனுமதிக்கப்படுவர். மேலும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 1000மும் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 25000 உம எமது பிராந்தியக் கணக்காளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.


தங்கள் கூறுவிலைக் கோரிக்கைகளை அனுப்புவதற்கான விண்ணப்பப்படிவங்களை பலாலி வீதியில் அமைந்துள்ள வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் உதவி விநியோக உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம். காரைநகர் சாலையில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை விண்ணப்பப் படிவங்களை 30-11-2002க்கு முன்னரும், கோண்டாவில் சாலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை விண்ணப்பப்படிவங்களை 18-12-2002 க்கு முன்னரும் தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ.ச., பலாலி வீதி, கோண்டாவில் சாலை என முகவரியிட்டு பதிவுத தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இப்பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படமாட்டாது. பொருட்களின் பெறுமதியின் 25% ற்குரிய பணம் உடன் செலுத்தப்படுவதுடன் மிகுதிப்பணம், ஒரு வார காலத்தினுள் செலுத்தப்பட்டு இக் காலப்பகுதியில் பொருட்கள் எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

தலைவர்,
கூறுவிலைச்சபை,
வ.பி.போ.ச.,
கோண்டாவில்.
08.11.2002 (சி-160)

# ஒஸ்லோ மாநாட்டில் இலங்கைக்கு பாரிய நிதியுதவிகள் கிடைக்கும்!

(ஒஸ்லோ)

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுக


ஆமிரேஜ்

ளின் கூட்டத்தில் பாரியளவிலான நிதி உதவிகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 25ம் திகதி நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இலங்கைக்கு பெரியளவிலான நிதியுதவிகளை வழங்குவதற்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் தாம் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதை உறுதி செய்துள்ளன. அமெரிக்காவின் சார்பில் இராஜங்க பிரதி அமைச்சர் றிச்சர்ட் ஆமிரேஜ், பிரிட்டனின் சார்பில் கடல் கடந்த நாடுகளுக்கான அபிவிருத்தித் துறை அமைச்சர் கிளையர் கோட் ஆகியோர் இக் கூட்டத்தில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஜப்பானிய அரசாங்கமும் உயர்மட்ட அரசுப் பிரதிநிதி ஒருவரை இந்த கூட்டத்துக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸ், ஜேர்மனி போன்ற இலங்கைக்கு உதவி வழங்கும் ஏனைய நாடுகளும் இம்முறை உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஒஸ்லோ கூட்டத்தில் இலங்கையிலிருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவொன்று செல்லவுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்.

தாய்லாந்து பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்மானங்களுக்கமைய, உதவி வழங்கும் நாடுகளிடம் புலிகளும், அரசும் இணைந்து நிதி உதவிக் கோரிக்கைகளை முன் வைப்பதால் பாரியளவிலான நிதி உதவி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுவது.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த சொற்பொழிவுத் தொடரில் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் "கந்தன் கருணை" எனும் தலைப்பில் இன்று காலை 10.30 மணிக்கு சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந் நிகழ்வில் அறிமுக உரையை சைவப்புலவர் நித்தியதசீகரன் வழங்குவார்.

(76)

## தாய்லாந்துப் பேச்சுக்களில் திருப்தி; புலிகள் முன்னேற்றமான நிலைப்பாடு!

### கருத்துக் கூறுகின்றார் லக்ஷ்மன் கதிர்காமர்

(சென்னை)

நொகன்பத்தம் நகரில் நடந்து முடிந்த இரண்டாவது கட்டச் சமாதானப்பேச்சுக்கள் தமக்கு ஓரளவுக்குத் திருப்தியளிப்பதாக, முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுடன் உரையாடியபோதே லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் ஓரளவுக்குத் திருப்திகரமானதாக உள்ளன. எனினும் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தே இதன் வெற்றியை மதிப்பிடமுடியும்.

இலங்கையின் மைய அரசியல் நீரோட்டத்தில் பங்கு பெறவிரும்புவது குறித்து புலிகள் வெளியிட்டுள்ள கருத்துக்களில் உறுதியாக இருப்பார்கள் எனத் தாம் நம்புவதாகவும் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

பேச்சுக்களின்போது முக்கியமான விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். நொகன்பத்தம் பேச்சுக்களின் முடிவில் உருவாக்கப்பட்ட அரசியல் விவகாரக்குழு தேசத்தின் கட்டமைப்பு, பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு என்பன குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ள கதிர்காமர்,



ஏனைய கட்சிகளையும் தமது பகுதிகளுள் செயற்பட அனுமதிக்கப் போவதாகப் புலிகள் தெரிவித்துள்ளமை அவர்கள் தரப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றகரமான மாற்றம் எனவும் லக்ஷ்மன் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.

(01)

## சமுர்த்தி அதிகாரிகளுக்கு விசேட கடன் திட்டம்

சமுர்த்தி அதிகாரிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கே இக்கடன் உதவி வழங்கப்படவிருக்கின்றது.

இவர்களுக்கு இரண்டு லட்சத்தில் இருந்து 5 லட்சம் ரூபா வரை கடன் வழங்குவதென சமுர்த்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

## காஞ்சிரங்குடா முகாம் அகற்றப்பட வேண்டும்!

### - விசாரணைக்குழு உறுப்பினர் விவேகானந்தன் -

(நமது நிருபர்)

பன்னிரண்டு வருடங்களாக இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீண்டும் சொந்தக் கிராமங்களில் குடியேற்றப்பட வேண்டும். அத்தோடு அம்மக்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும். காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாம் அகற்றப்பட வேண்டும் என காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பாக அரசினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு உறுப்பினரான சா.விவேகானந்தன் தனது அறிக்கையின் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையை அவர் எயர் வைஷ் மார்ஷல் ஹரி குணதிலகாவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது-

காஞ்சிரங்குடாப் படையினர் பொதுமக்கள் மீது வேண்டுமென்றே துப்பாக்கியால் சுட்டுள்ளார்கள். இது சட்டம், ஒழுங்கைத் திட்டமிட்டுச் சீர்குலைக்கும் செயலாகும்.

தங்களது பாதுகாப்புக்காக பொதுமக்கள் மீது சுட்டோம் என்று கூறுவது ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

அப்பாவிப் பொதுமக்களின் கொலைகளுக்குக் காரணமான படையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் தண்டனைக்கும் உள்ளாக்கப்பட வேண்டும்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட, காயப்பட்ட அனைவருக்கும் மிகவும் கூடியளவில் நஷ்டஈடு வழங்கப்படுதல் வேண்டும்.

கண்காணிப்புக் குழுவினரின் செயற்பாடு 24மணி நேரமும் இருத்தல் வேண்டும்.

திருக்கோவில் ஆஸ்பத்திரியில் உள்ள அதிரடிப்படை முகாம் அகற்றப்பட வேண்டும்.

மாதாந்தம் அதிரடிப்படை, புலிகள், கண்காணிப்புக்குழுவுடன் சேர்ந்து அமர்வுகளை நடத்த வேண்டும்.

அத்தோடு பொலிஸ் உயர் அதிகாரிகள் சம்பவத்தின் பின்னர் மீண்டும் மீண்டும் வாக்கு மூலங்களைப் பதிந்து சாட்சியங்களை முரண்பாடாக்க முயற்சி செய்வதாக உறுப்பினர் விவேகானந்தன் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

## கொள்ளைகளில் ஈடுபட்ட விமானப்படை அதிகாரி சிக்கினார்!

ஆபரண, வாகன கொள்ளைகளில் சம்பந்தப்பட்ட விமானப் படைக் கோப்ரல் உட்பட இருவர் புத்தளம், கட்டுநாயக்கா பகுதிகளில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் ரி 56 ரக துப்பாக்கி, மகசீன் இரண்டு ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைகள் சம்பந்தமாக கொள்ளைக் கோஷ்டியின் தலைவரும், மேலும் அறுவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று புத்தளம் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

புத்தளம் நகரத்தில் உள்ள நகைக்கடையில் இருந்து 10 லட்சம் பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாக, கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்தபோது தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்கா விமானத்தளத்தில் கடமை பார்க்கும் இந்தக் கோப்ரலை விசாரணை செய்தபோதே ரி 56 ரகத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## எனது வங்கிக் கணக்கில் இருப்பது கட்சியின் பணமே

### லஞ்ச விசாரணையில் விமல் வீரவன்ச

வங்கியிலுள்ள பணம் எனது பணமல்ல. அது கட்சியின் பணம். நன்கொடை தந்தவர்களின் பணமே வங்கியில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது என்று லஞ்ச விசாரணை ஆணைக்குழு முன் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தகாத வழியில் பணம் சேர்த்தாக இவர் மீது லஞ்ச விசாரண ஆணைக்குழு விசாரணையை மேற்கொண்ட போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இரண்டு சட்டத்தரணிகள் மூலம் அவர் விசாரணைக்கு சமூகமளித்திருந்தார்.

## 11 வயதுச் சிறுமிக்குத் திருமணம் பெற்றோர் பொலிஸாரால் கைது!

(புல்மோட்டை)

புல்மோட்டை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 11 வயது சிறுமிக்கும் 18 வயது இளைஞனுக்கும் பெற்றோரின் அனுமதியுடன் அண்மையில் திருமணம் நடந்தேறி உள்ளது.

இவ்விருவருக்கும் முஸ்லிம் சமுகத்தைச் சேர்ந்தவர்கள். முஸ்லிம் பெண்ணொருவர் 15 வயதுக்கு பின்பே திருமணம் செய்யலாம் என்ற கட்டுப்பாடு இருந்தும் இத்திருமணம் இடம் பெற்றுள்ளது.

பெண்ணின் பெற்றோர்களையும், விவாகப்பதிவு செய்த விவாக பதிவாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். சிறுமி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பொலிஸார் இந்த வழக்கை கெப்பிட்டிகொல்லாவ நீதிமன்றில் தாக்கல் செய்யவுள்ளனர்.

## முக்கியத்துவமற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டாம்!

### ஜனாதிபதியிடம் எம்.பிக்கள் குழு வேண்டுகோள்

(கொழும்பு நிருபர்)

ஜனாதிபதியின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறும் முக்கியத்துவமற்ற கூட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஜனாதிபதிக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் பொ.ஐ.மு.யின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் இடம் பெற்றிருந்தது. அதில் ஜனாதி பதி சந்திரிகாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக சர்வதேச புலனாய்வு நிறுவனம் ஒன்று தெரிவித்ததாக லக்ஷமன் கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி தமது பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும் முக்கியத்துவமற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். இந்தக் கோரிக்கையைப் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஜனாதிபதியிடம் நேரில் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மைலந்தனைப் படுகொலைகள்; நீதிமன்ற விசாரணைகள் பூர்த்தி

மைலந்தனைப் படுகொலைகள் தொடர்பான மேல்நீதிமன்ற விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன. 1992 ஓகஸ்ட் 02 ஆம் திகதி மைலந்தனில் 35 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வு விசாரணைகளை நடத்திவந்தது.

இந்த வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் 19 பேரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருக்கும் 18 இராணுவத்தினரும் நீதிமன்றத்தில் தமது சாட்சியங்களை வழங்கியுள்ளனர்.விசாரணைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ள நிலையில் விரைவில் இருதரப்புச் சட்டத்தரணிகளும் தொகுப்புரையைச் சமர்ப்பிப்பார்கள் எனத் தெரியவருகின்றது.

## நட்சத்திர ஹோட்டலில் கைகலப்பு செல்வந்தர், 6 படையினர் கைது!

அண்மையில் டிறான்ஸ் ஏசியா ஹோட்டலில் இடம்பெற்ற கலவரத்துக்கு காரணமாக இருந்த வியாபாரியும், 6 படையினரையும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

செல்வந்த வியாபாரி ஒருவரையும், அவரது நண்பரையும் தாக்கியதாகவே இன்னொரு வியாபாரி யான ரவி வெத்தசிங்காவும், இந்த ஆறு படையினரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட படையினரில் சிலர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சுயாதீன ஆணைக்குழுக்களில் இந்திய வம்சாவளியினருக்கு இடமில்லை

### - சதாசிவம் எம்.பி. குற்றச்சாட்டு -

(கொழும்பு நிருபர்)

அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள ஐந்து சுயாதீன ஆணைக் குழுக்களுக்காக முன் மொழியப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் இந்திய வம்சாவளியினர் ஒருவரும் உள்ளடக்கப்படவில்லை என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தலைவரும், பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள உள்ள பெயர்ப்பட்டியலில் இந்திய வம்சாவளியினர் சார்பில் ஒருவரும் உள்ளடக்கப்படாமைக்கு எதிராகத் தாம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டங்களை நடத்தப்போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY முதலாவது பிறந்தநாள்



பெயர்: ச.டிசாந்

முகவரி: தையிட்டி, காங்கேசன்துறை



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்!

# பருத்தித்துறைக் கடற்கரைப் பகுதியிலிருந்து மர்மமாகக் காணாமற்போனது மீன்பிடிப்படகு!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இன்பருட்டி கடற்கரை இறங்குதுறையில் தரித்து நின்ற மீன்பிடிப் படகு ஒன்றும் இதனுள் இருந்த மீன்படி உபகரணங்ளும் நேற்று முன்தினம் காணாமல் போயுள்ளன.

வழமையாக மீன்பிடிப்படகுகள் தரித்து நிற்கும் இடத்தில், இந்த மீன்பிடிப் படகும் நேற்று முன்தினம் தரித்து நின்றவேளை இரவு 10.30ற்குப் பின்னர் காணாமல் போயுள்ளது.

இந்த மீன்பிடிப்படகு 17 அடி நீளமுடையது எனவும் இதில் எட்டு குதிரை வலுவுடைய வெளியிணைப்பு இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டிருந்ததாகவும் இதனுள் 30 மீன்பிடி வலைகளும் இருந்தன எனவும்,

இவை அனைத்தும் இரண்டு இலட்சம் பெறுமதியுடையது எனவும் வடமாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்தார்.

இம் மீன்பிடி படகு காணாமல் போன சம்பவம் குறித்து தென்னிந்திய கடற்தொழில் சங்கங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், வடமாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் தவரட்ணம் தெரிவித்தார். (லி)

# எதிர்ப்புப் பேரணியில் கடற்தொழிலாளரை அணி திரளுமாறு சமாசத் தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமாதான முயற்சிகள் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில் இவற்றை குழப்பக்கூடிய வகையிலும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் விதத்திலும் கொழும்பு மேல்நீதிமன்றம் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை தீர்ப்பினை வழங்கியுள்ளது.

இந் நீதிமன்றத் தீர்ப்பினை நாம் கண்டிப்பதுடன் எமது ஆட்சேபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம் என வடமாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்றத் தீர்ப்பினை கண்டித்து இன்று யாழ்.நகரில் நடைபெறவிருக்கும் கண்டனப் பேரணியில் வடமாகான அனைத்து கடற்தொழில் சங்கங்களையும், கடற்தொழிலாளர்களையும் கலந்து கொண்டு தமது உணர்வு பூர்வமான எதிர்ப்பினை வெளிக்காட்டுமாறும் வடமாகாண கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணம் கேட்டுள்ளார். (லி)

# தாய்லாந்திலிருந்து திரும்பிய ஹக்கீம் கட்சி உறுப்பினரை சந்திக்கவில்லை

(அருள்)

தாய்லாந்துப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இன்னமும் தனது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

பேச்சுக்கள் தொடர்பாக அவருக்கும் அவரது கட்சி எம்.பிக்களுக்குமிடையே நிலவி வரும் முரண்பாடுகளே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, பாங்கொக் புறப்படுமுன்னர் தனது கட்சி எம்.பிக்கள் எட்டுப் பேரையும் தனியான சந்திப்பு ஒன்றுக்காக ரவூப் ஹக்கீம் கலதாரி மெரிடியன் ஹோட்டலுக்கு இரவு விருந்துக்காக அழைத்தபோதும் அவர்கள் அதில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவருகின்றது.

# உடைந்த நிலையிலுள்ள வல்வெட்டித்துறை மதகு

வல்வெட்டித்துறை உதயசூரியன் மதகு உடைந்தநிலையில் நீண்ட காலமாக உள்ளதால் அவ்வீதியால் செல்லும் பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

உடைந்திருக்கும் இம்மதகு மரக்கட்டைகளால் தற்காலிகமாக செப்பனிடப்பட்டிருப்பதால் பயணிகள் நடந்தே செல்ல வேண்டியுள்ளது.

இவ்வீதியினைத் திருத்துவதற்கு உரிய திணைக்களம் முன்வரவில்லை எனத்தெரிய வருகின்றது. (23)

## எதிரான நிலைப்பாடு இல்லை

விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசியல் நிலைப்பாடு எதையும் தாம் எடுக்கவில்லை என ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கையின் படி யாழ். மாவட்டத்திற்கு பொறுப்பாக கடமையாற்றிய சிரேஷ்ட உதவி தொழில் ஆணையாளராக இருந்த ஆர்.தர்மலிங்கம் வடவலயத்தின் பிரதி தொழில் ஆணையாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவருடைய வெற்றிடத்திற்கு சிரேஷ்ட தொழில் அலுவலராக கடமையாற்றிய எஸ்.முத்துக்குமாரசாமி பதில் தொழில் உதவி ஆணையாளராக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். (க,லி)

# அதிர்ஷ்ட வாரம்

## 08.11.2002 தொடக்கம் 14.11.2002 வரை

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பெரும்பாலானவர்கட்கு தெய்வ பக்தியுடன் கௌரவம், சமய அறிஞர் உறவு, பிதாவுடன் அன்பு, எதிரியின் ஆணவம் குறைதல், மங்கள வைபவங்களில் பங்கு பற்றல், உறவினருடன் மகிழ்ச்சி, பெண் ஆடை ஆபரண மகிழ்ச்சி, கடன் வசூல் முதலிய பலன்களுடன் மாதா சுகம், வாகன சுகம், அயலவர்களின் உறவு நன்று, புத்திர தேகசுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றம், கணவன் மனைவி உறவு சமநிலை, பிதா தேகசுகம் மத்திமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில சக ஊழியர்களின் ஒத்துழைப்பு, மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### இடபம்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரீடம், 1,2ஆம் பாதம்.

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வார ஆரம்பத்தில் தேகசுகக் குறைவு, எதிர்பாராத பயம், காரியத் தடை, பொதுச் சேவையில் கௌரவக்குறைவு, முதலிய தீய பலன்களுடன் வார நடுப்பகுதியிலிருந்து வார இறுதிவரை, தெய்வ பக்தி, சமயகுரு ஆசீர்வாதம், மங்கள வைபவங்களில் பங்கு பற்றல், நண்பர்கள் உறவினர் மத்தியில் மகிழ்ச்சி பரிமாறல், பெண்கள் ஆடையாபரண மகிழ்ச்சி முதலிய பலன்களுடன் மாதா சுகம், புத்திரர் சுகம், திருமணப் பேச்சு சற்று தாமதமடையும். கணவன், மனைவி உறவு சமநிலை, பிதா தேகசுகம் நன்று, செய்தொழில் முன்னேற்றம் சமம், தொழில்ஸ்தானத்தில் சாதாரண நிலை, மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் சமம்.

### மிதுனம்

மிருகசீரீடம் 3,4ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று, மகிழ்ச்சி, நவநாகரிகப் பொருள்கள் வாங்குவதில் மகிழ்வு, ஆடை ஆபரண மகிழ்ச்சி, தெய்வ பக்தி, மங்கல வைபவங்களில் பங்குபற்றல், முதலிய நற்பலன்களுடன் வார நடுப்பகுதியில் மட்டும் தேகசுகம் சிறிது பாதிப்படையலாம். புதிய காரியங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும், மாதா தேகசுகக் குறைவு, பிதா தேகசுகம் மத்திமம், செய் தொழில் வருவாய் சமம், தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### கர்க்கடகம்

புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் நன்று. பழைய கடன் நீங்குதல், எதிரியின் ஆணவம் குறைதல், தெய்வ பக்தி, உறவினர் வருகை, மனமகிழ்ச்சி, மங்கள வைபவங்களில் பங்குபற்றல், வார இறுதியில் தேகசுகக் குறைவு, புதிய காரியம் தடைப்படல் வேண்டும், மாதா தேக சுகம் நன்று, புத்திர சுபம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றம், கணவன் மனைவி சுகம், பிதா தேகசுகம், செய்தொழில் இலாபம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பாக பணியாற்ற முடியும். மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் குறைவு.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் மகிழ்ச்சிகரமாக கழிக்கலாம். தேக சுகம் நன்று, தெய்வ சேவையில் நற்பெயர், எடுத்த காரியம் வெற்றி, எதிரியின் ஆண வம் குன்றுதல், பெண்கள் மகிழ்ச்சி, ஆடையாபரணம் அணிவதில் மகிழ்ச்சி, கௌரவம், எல்லோராலும் மதிக்கப் படுதல் முதலிய பலன்களுடன் மாதா சுகம் மத்திமம், புத்திர சுகம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், கணவர் மனைவி மகிழ்ச்சி, பிதா தேகசுகம் மத்திமம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் நன்று.

### கன்னி

உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் ஆரம்பத்தில் வீட்டில உள்ளவர்களுக்கு தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, வாகனச் செலவு, தேவையற்ற பயம் முதலிய தீய பலன்களுடன் வார நடுப்பகுதியிலிருந்து இறுதி வரை பொது சேவையில் மதிப்பு. புகழ் கடன் வசூலாதல், எடுத்த காரியம் வெற்றி, எதிரியின் ஆணவம் குன்றுதல், முதலிய நற்பலன்களை காணலாம். மாதா தேக சுகம் நன்று, புத்திர சுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றம், கணவன் மனைவி சுகம். பிதா தேகசுகம் சமம். செய்தொழில் மேன்மை, தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி சமம், வியாபார முன்னேற்றம் குறைவு.

### துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் எடுத்த காரியம் வெற்றி, ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் மகிழ்ச்சி, தெய்வ சேவையில் புகழ், மக்களால் மதிக்கப்படுதல், பிரயாணம் முதலிய நற்பலன்களுடன் வார நடுப்பகுதியில் மனப் பயம், யாரையும் நம்பாமல் இருத்தல், வீட்டில் பெண்களுக்கு தேக சுபக் குறைவு ஆகிய பலன் களுடன் மாதா தேகசுகம் மத்திமம், புத்திரர் தேக சுகம் மத்திமம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், கணவன், மனைவி மகிழ்ச்சி, பிதா தேக சுகம் மத்திமம். செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம் சமம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் குறைவு.

### விருச்சிகம்

விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களால் குடும்ப மனஸ்தாபம், வாக்குவாதம், மனச் சஞ்சலம், அயலவர்களுடன் மௌனம் சாதிக்கவும், வார நடுப்பகுதியில் எடுத்த காரியம் வெற்றி, பூமியால் வருமானம், தெய்வ தரிசனம், சமய குருமார் ஆசீர்வாதம், ஆகிய பலன்களுடன் மாதா சுகம் மத்திமம், புத்திர சுகம் மத்திமம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், பிதா தேகசுகம் நன்று, வார இறுதி சிறிது பாதிப்படையும், செய் தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் குறைவு.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நெருங்கிய உறவினருக்கு மங்கள வைபவம் நடைபெறுதல், உறவினர் சங்கமம், மகிழ்ச்சியான பிரயாணம், அறுசுவையுண்டி ஆடையாபரண மகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, ஆகிய பலன்களுடன் வார நடுப்பகுதியில் மட்டும் சிறிய சுகயீனங்களும் இடம் பெறலாம். மாதா தேகசுகம் நன்று. புத்திர சுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும். கணவன் மனைவி மகிழ்ச்சி, பிதா தேக சுகம் சமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### மகரம்

உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் தேகசுகக் குறைவு தேவையற்ற செலவு, அயல் வீடுகளில் மனஸ்தாபம், வீட்டில் தேவையற்ற வாக்குவாதம்,ஆகிய பலன்களுடன் வார நடுப்பகுதியில் மங்கள வைபவங்களில் பங்கு கொள்ளல், நண்பர்கள் உறவினர் மகிழ்ச்சி, அறுசுவையுண்டி ஆடையாபரண மகிழ்ச்சியுடன் மாதா தேக சுகம் நன்று, தேகசுகம் சமம், திருமணப் பேச்சு முன்னேற்ற மடையும், கணவன் மனைவி சுகம் நன்று, தேகசுபம் சமம், செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### கும்பம்

அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் தெய்வ பக்தி, சமய அறிஞர் உறவு, நெருங்கிய உறவினர்களுக்கு மங்கள வைபவம் நடைபெறல் அறுசுவையுண்டி, ஆடையாபரண பலன், மற்றையோர் மகிழும்படி சேவை செய்தல் ஆகிய பலன்களுடன் மாதா தேகசுகம் சமம், புத்திரர் சுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றமடை யும். கணவன், மனைவி மகிழ்ச்சி, பிதா தேகசுகக் குறைவு, செய் தொழில் வருவாய் சமம், தொழில் ஸ்தானத்தில் தொழிலின் வேகம் குறைவு, மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபாரம் முன்னேற்றம்.

### மீனம்

புரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் தெய்வ சேவை, சமய நூல் கற்றல், சுப காரியங்களுக்கு வெளியூர் செல்லல், பெண்கள் மகிழ்ச்சி எல்லோராலும் மதிக்கப்படுதல், கர்வ நிலை உருவாதல், இதனால் தேவையற்ற செலவுகளுடன் மாதா சுகம் நன்று, புத்திரர் சுகம் நன்று, திருமணப் பேச்சு தாமதமடையும். பிதா தேக சுகக் குறைவு, செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர். இ.வெங்கடேச ஐயர்.

# பெண்களின் சுய பொருளாதாரத்திற்கு அணிசேர்க்கும் கூட்டுறவு மகளிர் கல்வி!

**"பெண்கள் ஏட்டுக்கல்வியோடு மட்டும் நின்றுவிடாது வீட்டிலிருந்தவாறும் சுயமாகத் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடியவகையில் தொழிற்கல்வியையும் கற்று - நிறைவான அறிவைப் பெற்றுத் தமது தலைமைத்துவப் பண்பை வளர்த்துக் கொள்வதனூடாக ஆளுமையுள்ள குடும்பப் பெண்ணாக மிளிரமுடியும் என்பதை வலியுறுத்துவதாகவே கூட்டுறவு மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி.வேதவல்லி - செல்வரட்ணத்தினுடனான நேர்காணல் அமைந்துள்ளது."**



*கேள்வி:-* கூட்டுறவுத் துறையூடாக சமூகத்தில் பெண்களை முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச்செல்வதற்காக எவ்வாறான திட்டங்களை மேற்கொள்கிறீர்கள்?

*பதில்:-* கூட்டுறவு அமைப்பின் நோக்கமானது - சமூக, பொருளாதார, கலாசார மேம்பாடு என்பதற்கிணங்க திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

கூட்டுறவு அங்கத்தவர்களில் ஆண், பெண், சமய, சமூக வேறுபாடுகள் இருக்காது. கூட்டுறவுத்துறையைப் பொறுத்தளவில் மகளிரின் பங்களிப்புக் குறைவாகவே இருக்கிறது. இக்குறைவுக்கான காரணமாக, நேரடியாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாடுகள் இல்லை என்று கருதலாம். இருந்தாலும், மக்கள் என்ற ரீதியில் கூட்டுறவுத்துறையைப் பெண்களும் நுகர்வது தவிர்க்கமுடியாதது. இந்த நிலையில் பெண்களின் ஈடுபாட்டை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்காக 'கூட்டுறவு மகளிர் கல்வித் திட்டமானது' 1980ஆம் ஆண்டு 'இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையினால்' அறிமுகப்படுத்தப்பட்டது.

கூட்டுறவு இயக்கம் ஒரு கிராமிய அமைப்பாகக் காணப்படுகிறது. இதன் கிளைகள் கிராமிய மட்டத்தில் மக்களோடு நெருக்கமாகப் பழகிய அமைப்பாக உருவாகியுள்ளது. இந்த வகையில் கூட்டுறவு மகளிர் கல்வித் திட்டமானது, இக்கிளை மட்டங்களில் இருந்தே ஆரம்பிக்கிறது. கிராமிய மட்டப் பெண்களை கிளை நிலையங்களுடாக இணைத்து, தேசியமட்ட மகளிருடன் இணைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறது. எனவே கிராமிய ரீதியாக அடிமட்டத்திலுள்ள பெண்களை இனங்கண்டு திட்டங்களை உருவாக்க முடிகிறது.

*கேள்வி:-* இத்திட்டங்களை என்ன அடிப்படையில் முன்னெடுக்கிறீர்கள்?

*பதில்:-* மாவட்ட மட்டத்தில் கூட்டுறவு மகளிர் கல்வியை முன்னெடுப்பதற்காக-யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினுடைய தொழிற்பாடுகளில் ஒன்றான 'யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வித் திட்டம்' என்ற கல்வித்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. மகளிர் அமைப்பின் பிரகாரம், மாவட்ட மகளிர் குழு அமைப்பொன்று செயற்படுகிறது. இந்த மாவட்ட மகளிர் குழு ஆண்டுதோறும் கூட்டுறவு மகளிர் கல்வித்திட்டத்திற்கு வேண்டிய தகவல்களை இனங்கண்டு அதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து- அதனை யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கும். காலத்திற்கு காலம் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய, மாவட்ட மகளிர் குழு மகளிருக்கான திட்டங்களை முன்னெடுக்கும்.

*கேள்வி:-* இதனூடாக என்னென்ன பயிற்சிகளை வழங்குகிறீர்கள்.

*பதில்:-* பெண்கள் வீடுகளில் இருந்தவாறு சுயமாகவே தமது பொருளாதாரத்தை விருத்தி செய்யக்கூடிய வகையில் - தையல், மனைப்பொருளியல், ஐசிங், தலையலங்காரம், முக ஒப்பனை மற்றும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய சிற்றுண்டிகளைத் தயாரித்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய தொடர்பயிற்சிகளும், கால்நடை வளர்ப்பு, முதலுதவி, சுகாதார சீர் முறைகளைக் கடைப்பிடித்தல், மகளிர் தலைமைத்துவ அபிவிருத்தி போன்ற குறுகிய காலப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறோம்.

இவைதவிர புகைப்படப் பிடிப்பு, இதழியல் பயிற்சி போன்ற விசேட பயிற்சிகளுடன் கூட்டுறவுச் சபையுடன் இணைந்து செயற்படும் 70 இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் வழங்குகிறோம்.


*கேள்வி:-* இத்திட்டங்களினூடாகப் பயிற்சிபெற்ற மகளிருக்கு வேலைவாய்ப்பு எவ்வாறு இருக்கிறது?

*பதில்:-* பயிற்சி பெற்றவர்கள் பெரும்பாலும் தமது வீட்டில் இருந்து கொண்டே பொருளாதார மேம்பாட்டிற்காக உழைத்து வருகிறார்கள். சுய உற்பத்தி, சுய வேலைவாய்ப்புத்தான் எமது நோக்கம். ஆனாலும் இதனூடாக தாமாகப் பலர் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டது, எமது கல்வித்திட்டம் பெற்ற வெற்றியென்றுதான் கூற வேண்டும். அதுமட்டுமன்றி, மனைப்பொருளியல் கல்வி டிப்ளோமா பயிற்சியை நிறைவுசெய்த மகளிர் இன்று ஏனைய நிறுவனங்களில் இத்துறையின் பயிற்றுனர்களாகத் தெரிவு செய்யப்பட்டு, வேலைவாய்ப்பை பெற்றது மட்டுமன்றி, எமது பயிற்சியின் தரத்தை மற்றவர்கள் மதிப்பிடக்கூடிய அளவிற்கு செயலாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

கேள்வி:- தற்போது மாவட்டமட்டம், கிராமிய மட்டத்தில் நடைமுறையில் உள்ள பயிற்சித் திட்டங்கள் என்ன?

*பதில்:-* சங்க மட்டங்களில் உடுப்பிட்டி, கரவெட்டி, அச்சுவேலி, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 6 மாத காலம் கொண்ட மனையியல் அடிப்படைப் பயிற்சி நெறி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாவட்ட மட்டத்தில் 10 மாதங்களைக் கொண்ட மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவற்றைவிட பிராந்திய மட்டங்களில் எமது கல்வித் திட்டத்திற்கு அமைய பல்வேறு சங்கங்களிலும் மகளிருக்கான கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வருகின்றன.

*கேள்வி:-* இனிவரும் ஆண்டில் எத்தகைய பயிற்சித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளீர்கள்?



பதில்:- 2003ஆம் ஆண்டிற்கான பயிற்சித் திட்டங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறோம். முக்கியமாக, எதிர்வரும் ஆண்டிற்கான பயிற்சித் திட்டத்தில் தற்கால ஓட்டத்திற்கேற்ற நவீன முறைகளை உட்புகுத்தவும் மற்றும் மகளிர் கூடுதலாக விரும்பிக் கேட்பதன் காரணமாக, விசேடமான ஆங்கிலப் பயிற்சி நெறிகளையும் உள்ளடக்குவதோடு, மாவட்டக் கூட்டுறவுச் சபையால் ஆரம்பிக்கப்படவுள்ள கணினிப் பயிற்சி நிலையத்தினூடாக மகளிருக்கு கணினிப் பயிற்சியையும் வழங்கவுள்ளோம்.


*கேள்வி:-* மகளிர் தினத்தில் கூட்டுறவு மகளிர் குழுவின் பங்களிப்பு, செயற்பாடுகள் எவ்வாறு அமையும்?

பதில்:- பெண்களின் உரிமைகளை வெளிப்படுத்துவதாகவே மகளிரின் பங்களிப்பு இருந்தது. ஆனால் நாங்கள் சற்று வித்தியாசமான முறையில் கூட்டுறவுத்துறையூடாக பெண்களின் தலைமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்கான போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குவதோடு, கூட்டுறவுத்துறையில் இணைந்துள்ள பெண்கள் ஒன்றிணைந்து தங்களுடைய செயற்பாடுகளை பரிசீலனை செய்யவும், எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களைக் கண்டுகொள்ளக் கூடியதான நாளாகவும் அதனைப் பயன்படுத்துகிறோம். அன்றையதினம் கூட்டுறவு மகளிரின் எழுச்சி நாளாக அது கொண்டாடப்படும்.

*கேள்வி:-* மகளிர் விவகார உத்தியோகத்தர் என்ற வகையிலும், குடும்பப் பெண் என்ற வகையிலும் பெண்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?


பதில்:- பெண்கள் எவ்வளவு தான் படித்தாலும், தொழிற்கல்வியையும் கற்றுத் தமது குடும்பத்தை சுயமாகவே தனித்து நின்று வழிநடாத்தக்கூடிய வகையில், தேவையான சுயமுயற்சி மற்றும் பயிற்சிகள் எல்லாவற்றையும் பெற்று நிறைவான தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்வதனூடாக, ஆளுமையுள்ள குடும்பப் பெண்ணாகவும், இன்னும் தன்னைச் சார்ந்தவர்களிற்கு உதவக்கூடிய ஒருவராகவும் செயற்பட வேண்டும்.

**● நேர்காணல்- கலா**




## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






*சிந்தி,*

உனது ஆக்கபூர்வமான ஆலோசனைகளுடன் வந்த கடிதம் கிடைக்கப் பெற்றேன். நன்றி.

பெண்களின் ஆடை அணிகலன் மோகம் ஏற்படுத்தும் பிரச்சினைகளை விளக்கி, அவற்றை பெண்கள் உணரச்செய்ய வேண்டுமென எழுதியிருந்தாய். உண்மைதான்.

குழந்தைகளுக்கு அணிகலன்களை அணிவதனால், அவற்றில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதுடன் கள்வர் அந்த ஆபரணங்களை திருட முனைவதால் குழந்தையையே இழக்க நேரலாம் என்று கூறியிருந்தாய்.

பொன் நகைகளை அணிவது பெரியவர்களுக்கும் இத்தகைய திருடர் பயத்தையும் ஆபத்தையும் ஏற்படுத்துகிறது. இவற்றைப் பாதுகாப்பது அடுத்த பிரச்சினை.

054. யா/கா/969 திருமதி சத்தியபாமா ரங்கநாதன்
055. யா/கா/983 திரு.சண்முகம் பத்மநாதன்
056. யா/கா/1000 திருமதி தங்கம்மா தம்பையா

*(மிகுதி நாளை தொடரும்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## வலைக்குள் சிக்கும் முயற்சி!

கடந்தகாலப் போர்ச்சூழலினால், அதல பாதாளத்துக்குச் சென்று கொண்டிந்த பொருளாதாரத்தை, மீண்டும் நேர்ப்பாதைக்கு கொண்டுவரக்கூடியதான பெரு முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஐ.தே.முன்னணி அரசாங்கம் - போரினை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்ததன் மூலம் - மிகச் சாதகமான பொருளாதார ஆதாயத்தை ஈட்டத் தொடங்கியுள்ளது.

கொழும்பு முதற்கொண்டு - தெற்கின் எந்தப் பகுதிகளிலும் நிலவிய தாக்குதல் அச்சங்கள் தவிர்ந்த நிலையில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருமெடுப்பில் தமது முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை - ஆண்டுதோறும் அதிகரித்து வந்த போர்ச்செலவு மட்டுப்படுத்தப்படும் சூழலும் உருவாகி வருகின்றது.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்த உல்லாசப் பயணத்துறை, மீண்டும் பெருவளர்ச்சியைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள், புதிய அமைதிச் சூழலின் வழியே தோன்ற ஆரம்பித்துள்ளன.

பொருளாதார ரீதியாக - போரின் நேரடிப் பாதிப்புக்களிலிருந்து இவ்விதம் அரசாங்கம் மீளத் தொடங்கினாலும்- போரின் நீடித்த, மறைமுகத் தாக்கங்கள், பொருளாதார நெருக்கடியை தற்போதைக்கு தீர்த்துவிடாது என்பதை, இம்முறை வரவு செலவுத்திட்டம் எடுத்துக் கூறுவதாகவுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கான, திஸ்ஸ தெய்வேந்திர ஆணைக்குழு சிபாரிசு செய்த சம்பள உயர்வுகள் கருத்திலெடுக்கப்படாததும் -

புதிய நியமனங்கள் எதுவும் தற்போதைக்கு செய்யப்படாதென்ற அறிவிப்பும் -

ஓய்வூதியத் திட்டத்தில் - ஓய்வூதியம் பெறுபவரின் செலுத்துகைப் பணம் அதிகரிக்கப்பட்டிருப்பதும் - இந்த நெருக்கடியை வெளிக்காட்டுவனவாகவே உள்ளன.

அதேவேளை - அரசாங்கம் தனக்கான பொருளாதார அழுத்தங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள - தனியார்மயமாக்கத்தை துரிதப்படுத்த முனைந்து நிற்பதையும் இந்த வரவு செலவுத் திட்டம் வெளிப்படுத்துகின்றது.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதியமைப்புக்களின் விதிமுறைகளுக்கமைவாக - அரசாங்கத் துறைகளில் ஆட்குறைப்பும், புதிய நியமனங்களை நிறுத்திக் கொள்ளுதலும், சம்பள உயர்வு மறுப்பும் செய்யப்படுவதை - தனியார்மயமாதல்/உலகமயமாதல் கோணத்திலிருந்தும் சாதகமான முறையில் ஆராயமுடியும்.

அதேவேளை - கம்பனிகள் மீதான வரியானது முப்பத்தைந்து சதவீதத்திலிருந்து, முப்பது சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதும் தனியார் மயமாதலை ஊக்குவிக்கக் கூடியதாகும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு கொள்வதற்காக இவ்விதம் தனியார்மயமாதலை அரசாங்கம் ஊக்குவிப்பது - உடனடித் தீர்வைத் தருவதாக, சாதகமான பொருளியற் சூழலை ஏற்படுத்துவதாக இருந்தாலும் -

உலகமயமாதலின் வேகத்தினுள் வேகமாக இலங்கை அள்ளுண்டு போவதையே நாம் மறுபுறமாகக் காண முடியும்.

இதன்வழியே - நாட்டின் சுயத்திற்கும், தற்சார்புக்கும் பெரும் பாதிப்பு விளைவிக்கக் கூடியதான பொறிக்குள் நாடு நகர்ந்து கொண்டிருப்பது எவராலும் மறுக்க முடியாததாகும்.

தனியே நாட்டிற்கு மட்டுமன்றி, சமுதாயத்தினுள்ளும் பௌதீக, உளவியல் ரீதியான பாதிப்புக்களும் இதனால் ஏற்பட இடமுண்டாகும்.

தனித்தனித் தீவுகளாக மனிதர்கள் பிரிந்து கொள்வதும், பங்குபற்றல் குறைவதும், பாதுகாப்பற்ற உணர்வு மேலோங்குவதும், இயந்திரமயமான வாழ்க்கையுமாக- மனிதம் மரத்துப்போகும் சூழலும் - சமூக உறுப்பினர்களிடையே தோன்றும் அபாயத்தை புறக்கணிக்கவும் முடியாது.

பொருளாதார நெருக்கடிக்குள்ளிருந்து தப்புவதென நினைத்துக்கொண்டு - உலகமயமாதல் வலைக்குள் சென்று வீழும் போக்கிலேயே நாடு செல்கின்றதென்பதை மிக எச்சரிக்கையுணர்வுடன் நோக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

# யாழ். ஐஸ் தொழிற்சாலையை புனரமைப்பதற்கு நடவடிக்கை!

### திங்களன்று திருத்த வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதியில் சேதமடைந்த நிலையில் உள்ள வடமாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையின் புனரமைப்பு வேலைகள் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

முன்னைய காலங்களில் இத்தொழிற்சாலை கடற்கரையோர இராணுவத்தின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருந்ததால் புனரமைப்புச் செய்ய இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்திருந்தனர்.

தற்போது இராணுவத்தினருடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் பயனாக இத்தொழிற்சாலையை புனரமைப்புச் செய்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியதையடுத்தே இப் புனரமைப்பு வேலைகள் தற்போது ஆரம்பமாகவுள்ளன என வட மாகாணக் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணம் தெரிவித்தார்.

(லி)

## உலக வங்கிக் குழுவினர் இன்று வவுனியா விஜயம்

(நமது நிருபர்)

உலகவங்கிக் குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை வவுனியா வருகின்றனர். உலகவங்கியின் நிதி உதவியுடன் வவுனியா மாவட்டத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கிராமியத் திட்டங்களை நேரில் சென்று பார்வையிடும் நோக்கிலேயே இவர்கள் விஜயம் செய்கின்றனர்.

மரக்காரம்பளை, காத்தார் சின்னக்குளம் ஆகிய கிராமங்களில் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வேலைத்திட்டங்கள் யாவும் நிறைவுபெற்றுள்ளன. இத்திட்டங்களால் கிராம மக்கள் பெறும் பயனை அறிவதற்கே இவர்கள் இன்று விஜயம் செய்கின்றனர்.

## வரிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய 3 லொறிகள் பொலிசாரிடம் சிக்கின!

வரி அனுமதிப்பத்திரமின்றி மூன்று லொறிகளில் மணல் ஏற்றி வந்தவர்களை வல்லைச் சோதனைச் சாவடியில் வைத்துப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் வடமராட்சி கிழக்கிலிருந்து மணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்துடன் மணல் ஏற்றி வந்த மூன்று லொறிகளையும் வழிமறித்த பொலிஸார் - அவர்களிடம் வரி அனுமதிப்பத்திரம் இல்லாமையாலேயே கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது அவர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டதோடு மணலும் பறிமுதல் செய்யப்பட்டது. (23)

## கோட்டை மீது தாக்குதல் நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை

### சட்டமா அதிபர் வழக்கைக் கைவிட்டார்

(கொழும்பு நிருபர்)

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தி மரணம், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர் ஒருவர் கொழும்பு மேல்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எம்.பி.ரமேஸ் என்ற இளைஞர் 1990 ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி வரை கோட்டை முகாம்மீது தாக்குதல்களை நடத்திப் படையினருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாகவும், சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகவும் இவர் மீது பொலிஸார் குற்றஞ்சாட்டியிருந்தனர். 1992இல் கைதுசெய்யப்பட்ட இவர் தடுத்து வைக்கப்பட்டு மேல்நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுவந்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த இவரது வழக்கை சட்ட மா அதிபர் வாபஸ் பெற்றதையடுத்தே நேற்றுமுன்தினம் மேல் நீதிமன்றம் இவரை விடுதலை செய்துள்ளது.

(01)

# காஞ்சிரங்குடா விசாரணை அறிக்கை இன்று பிரதமர் ரணிலிடம் கையளிப்பு!

(நமது நிருபர்)

அம்பாறை - காஞ்சிரங்குடாவில் ஏழு அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக ஆராய்வதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஹரி குணதிலக ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை இன்று கையளிக்கவுள்ளது.

ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஹரி குணதிலக தலைமையிலான இந்தக் குழுவின் விசாரணைகள் அனைத்தும் பூர்த்தியடைந்து விட்டன. இறுதி அறிக்கைகளும் தயார் செய்யப்பட்டுவிட்டதாகவும் குழுவின் தலைவரான ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

இன்று தமது இறுதி அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோரிடம் கையளிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காஞ்சிரங்குடா அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக இந்த ஆணைக்குழு விசேட அதிரடிப் படையினர், விடுதலைப்புலிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரிடம் இருந்தும் சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொண்டர் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட!



### தாய்லாந்துப் பேச்சுக்களில் பங்குபற்றியவர்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் தொண்டர் படைகளின் பிரதம கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட பதவியேற்றுள்ளார்.

நேற்றுக்காலை தொண்டர் படைத்தலைமையகத்தில் இவர் தனது பொறுப்பினை ஏற்றுக்கொண் டார். முன்னர் இப்பதவியை வகித்து வந்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா தொடர்ந் தும் பிரதித் தலைமை அதிகாரியாகவே இருப்பார்.

இதேவேளை - மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட வகித்து வந்த இராணுவ அதிகாரிகளுக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரிப் பதவியை மேஜர் ஜெனரல் சூல செனவிரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது அரசதரப்பு ஆலோசனைக்குழுவில் இடம்பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குறைதீர் மன்றம்



எமது பகுதியூடாக இளவாலைக்கான உயர் மின்னழுத்த மார்க்கம் கொண்டு செல்லப்படுவதால் பயன்தரு மரங்கள் பல அழிவுறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால எமது பகுதியின் இயற்கைவளம் பெரும் பாதிப்படையும் நிலையிலுள்ளது. இலங்கை மின்சார சபையினர் எமக்கு எதுவித தகவலும் தெரிவிக்காமல், எமது கையெழுத்தை வாங்கியதன் பின்னர் தான் மரங்கள் தறிப்பதற்கான கடிதத்தை எமக்குத் தந்தனர். உயர் மின்னழுத்த மார்க்கம் எமது பகுதிக்கூடாக செல்வதற்கு பூரண எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். இது தொடர்பாக தங்கள் குறைதீர்மன்றம் மூலம் ஏதாவது நிவாரணம் கிடைக்குமா?

இப்பகுதி மக்கள் சார்பாக
சீ.சுதாகரன், ர.ஜோசவ், எஸ்.பரமநாயகம்,
இ.சுப்பிரமணியம்.

**நமது ஈழநாடு**

தங்களது குறைபாடு தொடர்பாக, மின்சாரசபையின், வட பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தனை நமது ஈழநாடு நேரடியாகத் தொடர்பு கொண்டு தங்களது விடயம் தொடர்பாக கேட்டபோது, அவர்- உங்கள் பகுதிக்கூடாக உயர் அழுத்த மின் மார்க்கம் செல்வது பிரச்சினையாக இருக்குமாயின் -- உங்கள் பகுதிப் பிரதேச செயலாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டு, பிரதேச செயலாளர் அரச அதிபர் மூலமாக மின்சார சபையினருக்கு அறிவித்தல் விடுப்பதன் மூலமாக மேற்படி மின்மார்க்கத்தை கொண்டு செல்வதனைத் தவிர்க்கலாம் எனக் கூறினார்.

# தமிழ்த்தேசிய உணர்வுமிக்க இந்த மண்ணில் ஆங்கிலமொழி வழிக் கல்வியால் பாதிப்பு வராது!

**இலங்கையின் புதிய கல்விக் கட்டமைப்பில் முக்கியம் பெறும் ஆங்கிலமொழி மூலமான கற்கைநெறி அமுலாக்கம் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற் துறை தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் அவர்களுடன் உசாவிய கருத்துக்கள் இங்கே.**

### ஆங்கிலமொழி அமுலாக்கமும் பின்னணியும்

மொழி என்பது எங்களுடைய சிந்தனை அல்லது எண்ணங்கள் மூலமாக பிறந்த கருத்துக்களை வெளியிடவும் அல்லது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், தொடர்புகளை கட்டியெழுப்பவும் தளமாக விளங்குவது. கருத்துப்பரிமாற்ற ஊடகமாக மொழி என்ற எண்ணக்கரு இடம் பெறுகின்றது. இதனடிப்படையில் உலகில் பல மொழிகள் பயன்படுத்தப்பட்டாலும், ஒரு மொழியின் தனித்துவம், இலகுத்தன்மை, நடைமுறைச் சாத்தியம், சிறப்பியல் கூறுகள் என்ற அடிப்படையில் ஆங்கில மொழி முக்கியமாக விளங்குகின்றது. உலகின் சர்வதேச மொழியாக ஆங்கில மொழி அமைவதுடன், பல்வேறு வெளியீடுகளும், தொடர்புகளும், மாற்றங்களும் இம்மொழியையே தளமாகக் கொண்டு இயக்கம் பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் ஆங்கில மொழியின் வளர்ச்சி பற்றிப் பார்க்கின், 1942இற்கு முன்னர் ஆங்கிலமொழி மூலமான பிரயோகக் கட்டுமானங்களே நிலவின. இதற்கு காலனித்துவ ஆட்சி முறைமையும் காரணமாக அமைந்தது. பின்னர் C.W.W. கன்னங்கரா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சுயமொழி மூலமான கற்கையே இற்றைவரை நடைமுறையில் இருந்து வருகின்றது. இற்றைவரை எமது சுயமொழி மூலமாகவே செயற்பாடுகள், தொடர்புகள், தகவல் பரிமாற்றங்கள் இடம்பெற்றுவருவதால் உலகத்தோடு ஒத்திசைவான விருத்தியை எட்டமுடியவில்லை என்பதை இப்பொழுது ஏற்பட்டுள்ள பின்னடைவான தன்மையுடன் ஒப்புநோக்கி உணர்ந்துகொள்ள முடிகின்றது.

### ஆங்கில மொழியின் அவசியம்

நாம் உலகின் எப்பகுதிக்குச் சென்றாலும் அப்பகுதிச் சமூகத்துடன் உறவைக் கட்டியெழுப்பவும், எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், புதிய செல்நெறிகளை உள்வாங்கிக் கொள்ளவும், பெரிதும் துணைபுரிகிறது.

சமகாலத்தில் எமது நாட்டைப் பொறுத்தமட்டில் கற்ற கல்விக்கு ஏற்ற வேலைவாய்ப்பினைப் பெறமுடியாத நிலையினால் எமது பிரதேசத்தை விட்டு வேறு பிரதேசத்திலோ அல்லது வெளிநாட்டிலோ வேலை பெற்றுக கொள்வதற்கும், மேற்படிப்புக்களைத் தொடரவும், வாழ்க்கையை உலக நீரோட்டத்துக்கு ஏற்ப சமச்சீராக முனனெடுத்துச் செல்லவும் வேண்டப்படுகின்றது.

### மொழியறிவை விருத்தி செய்து கொள்ளும் காலகட்டம்.

மொழியைக் கற்றல் என்ற விடயம் ஒருவரிடையே திடீரென ஏற்பட முடியாத அம்சம். மொழியை ஒருவர் விருத்தி செய்துகொள்ள வீட்டுச் சூழல், பாடசாலைச்சூழல், அதிலும் ஆரம்பப் பாடசாலைக் கட்டமைப்பே மிகமுக்கிய காலப்பகுதியாகும்.




ஆரம்பப் பாடசாலை பருவப்பிள்ளைகள் மொழிசார் திறன்களைக் கற்பது இலகுவாக அமையும் என்பது எனது கருத்து.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் அங்குள்ள பிள்ளைகள் இரண்டு வயது தொடக்கமே ஆங்கிலமொழியைச் சரளமாக பிரயோகிக்கின்ற தனமையை என்னால் காணமுடிந்தது. அங்கு ஆங்கிலமொழி கட்டாய பாடமாக ஆக்கப்பட்டுள்ளது. இதனால் ஆங்கிலமொழியை கற்பதற்கு ஒருவன் நிர்ப்பந்திக்கப்படுகிறான். என்னைப் பொறுத்தமட்டில் ஆரம்பப் பாடசாலை அல்லது தரம் 6 தொடக்கம் ஆங்கிலமொழி கற்கையை மேற்கொள்வது பொருத்தமாக அமையும் என்பது ஆகும்.

### பல்கலைக்கழக மட்டத்தில் ஆங்கிலமொழியின் தன்மை

பல்கலைக்கழகத்தை பொறுத்த மட்டில் விஞ்ஞானத்துறை, மருத்துவதுறைகள் ஆங்கிலமொழிமூலமான கற்கை அமைப்பே ஏற்கனவே கொணடமைந்ததுடன், தற்பொழுது முகாமைத்துவம், வர்த்தகத் துறைகள் ஓரளவு ஆங்கிலமொழியாக்கப் பட்டுள்ளமை முன்மாதிரியான செயற்பாடாக எமது சமூகத்திற்கு அமைந்துள்ளது.


கலைத்துறையினரைப் பொறுத்தமட்டில் இவற்றினை உடனடியாக செயற்படுத்துவதில் சில தடைகள் இருப்பினும், சில பாடங்களைத் தவிர்ந்த ஏனைய பாடப்புலங்களை ஆங்கிலமொழி மூலமாக மாற்றியமைப்பதில் எவ்வித இடையூறுகளும் இருக்க மாட்டாது என்று நினைக்கிறேன். கலைத்துறையினரைப் பொறுத்தமட்டத்தில் ஆங்கிலமொழி அறிவு தமக்குக் கட்டாயம் தேவையற்றது, அதனைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம், ஊக்கம் என்பன கீழ் நிலையில் இருப்பதையே நோக்க முடிகின்றது.

### பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் பற்றி

இன்று ஆங்கில மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவு என்றே கூறலாம். அதேநிலையில் ஆசிரியர்களின் ஆங்கிலமொழி சார் அறிவும், தரமும் கீழ்நிலையையே காட்டி நிற்கின்றது. இவர்கள மொழிசார் விருத்தியை பல்வேறு கூறுகளில் மேம்படுத்த வேண்டுவதோடு, மொழியைக் கற்றுத் தெளிவு பெறவேணடும் என்ற ஆர்வமும், ஊக்கமும் மிக அவசியம்.

அண்மையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற தன்மையில் "மொழிபெயர்ப்பாளர்" என்ற பதவி நியமனம் வழங்கப்பட்டதையும், பின்னர் அவர்கள் அத் தொழிலில் படும் வேதனைகள், சவால்கள் எத்தனையோ என்பதும் கண்கூடு. அவர்கள் அது தொடர்பான எந்தவொரு செயலையும் செய்ய முடியாதவர்களாக, தள்ளப் பட்டுள்ளனர்.

### தாய்மொழி மீது இதன் செல்வாக்கு



ஆங்கிலமொழியை கட்டாய பாடமாகக் கொண்டு வருவதால் தமிழ் மொழியில் இதன் செல்வாக்கு ஓரளவு பாதிப்பாகவே அமையும். இந்தியாவைப் பொறுத்தமட்டில் தாய் மொழியை வீட்டில் கூட பயன்படுத்தாத தன்மையினையும், ஏனையோருடன் உரையாடும்பொழுது கூட ஆங்கில மொழியையே உபயோகிக்கின்ற நிலையையும் அவதானிக்க முடிந்தது. ஆரம்பப் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் கூட தமிழில் பேசத் தெரியாது, ஆங்கில மொழியில் என்றால் பேசுவேன் என்று கூறும் பாங்கும் உண்டு. இவற்றினூடாக தாய்மொழி மீதான பாதிப்புக்களை உணர முடிகின்றது.

நாம் ஆங்கிலமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையில் ஒரு சமச்சீர்த்தன்மையில் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொழுது, ஒன்றினது செல்வாக்கு இன்னொன்றில் இடம் பெறச் சந்தர்ப்பம் குறைவாக இருப்பதுடன், இதைவிடுத்து முழுமையாகவே ஆங்கிலமொழியாக்கல் தாய்மொழியை ஏதோ ஒரு வழியில் பாதிப்படையச் செய்யும்.

யாழ்ப்பாணச் சமூகக் கட்டமைப்பைப் பொறுத்தமட்டில் தமிழ்மொழியில் பாதிப்பு ஏற்படுத்தமாட்டா என்றே கூறலாம். எமது சமூக அமைப்பு தமிழ் மொழியுடனும், தமிழர் என்ற தேசிய உணர்வுடனும் பின்னிப்பிணைந்தது. இங்கு கூடியளவு தாய்மொழி சார்பான பிரயோகமே இடம்பெற வாய்ப்புக்கள் அதிகம். வெளிநாடுகளைப் பொறுத்தமட்டில் இந்நிலைக்கு எதிர்மயமான சூழ்நிலையே காணப்படுகின்றது. உலகில் மிகவும் கட்டுக்கோப்பான தமிழ் மரபை கொண்ட பிரதேசம் என்றால் இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களே. தமிழ்நாடு கூட இரண்டாம் நிலையில்தான். தமிழ் நாட்டில் உள்ளவர்கள் ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழியை கலந்து பேசுபவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் இந்நிலையில் இருந்து வேறுபட்ட சூழ்நிலையினையே அவதானிக்க முடிகிறது.

### உயர்தரக்கல்விக் கட்டமைப்பில் ஆங்கில மொழியை அமுலாக்குவதன் பாதிப்பு

எமது கல்வி முறைமை போட்டிகளுடனும், புள்ளிகளுடனும் மிகவும் இணைவு கொண்டமைந்தது. இந்தவகையில் உயர்தரத்தில் ஆங்கிலமொழி மூலமான கற்கையை அமுலாக்குவது பிள்ளைகளின் வாழ்க்கையைப் பாதிப்படையச் செய்யும். இவர்களுக்கு பாடம்சார் அறிவு, புலமை இருந்தும் அவற்றினை வெளிப்படுத்தத் தெரியாதவர்களாக நிர்ப்பந்திக்கப்படுவர்.

சிறிது காலத்திலும் கூட விஞ்ஞானம், கணிதம், வர்த்தகத்துறைகளை ஆங்கிலமொழி மூலமாக மாற்றியமைத்தாலும், கலைத்துறையை பொறுத்தமட்டில் கடினமான விடயமாகவே அமையும்.

### புவியியல் பாடத்துறையை பொறுத்தவரையில்


எமது பாடத்துறையை பொறுத்தமட்டில் ஆங்கிலமொழி மூலமான கற்றல் கற்பித்தலை ஏற்பதில் எவ்வித தடைகளும் இல்லை என்றே கூறமுடியும். ஆங்கிலமொழி மூலமாக கற்பதே எமது பாடப்புலத்தை பொறுத்தமட்டில் இலகுவாகவும், பயனுடையதாகவும் அமையும். இதற்கு எங்களுடைய விரிவுரையாளர்கள் எப்போதும் தயாராகவே உள்ளனர்.

*முக்கிய குறிப்பு:*

எவ்வித கருத்துக்களையும் பொருட்படுத்தாது பல்கலைக்கழக மடடம், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய பயிற்சி நிலையங்கள், தொழில் நுட்ப கல்லூரிகளில் ஆங்கிலமொழி மூலமாக கற்கையை கட்டாயமாக அமுலாக்க வேண்டும். முதலில் ஆங்கிலத்தை சிறப்பாக எழுதவேண்டும் அல்லது பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்காமல் படிப்படியாக செயற்படுத்தும்பொழுது இலகுவானதாக அமைவதுடன், அடுத்த தலைமுறையினருக்கு ஆங்கில அறிவுடைய ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், வழிகாட்டுநர்கள் சிறப்பாக கிடைப்பது மட்டுமல்லாது உயர்தரக் கல்வியை ஆங்கிலமொழி மூலம் போதிப்பதுவும் இலகுவான செயலாக அமையும் என்பது என்னுடைய நம்பிக்கை ஆகும்.

**சந்திப்பு ~ ப.இராஜேஸ்வரன்**

# சிவலிங்க வழிபாட்டால் செய்த பாவம் தீரும் உயர் மேலான பதவிகள் கிடைக்கும்!



பல தெய்வ வழிபாடுடைய இந்துக்களில் பலருக்கும் எந்த மூர்த்தியை வழிபட்டால் எல்லா மூர்த்திகளையும் வழிபட்ட பலனைப் பெறலாம் என்பது தெரியாமலிருக்கின்றது. அதைப் பலரும் அறியும்படி தெரிவிக்கவே சிவன்கோவில்களில் மூலஸதானத்தில் சிவலிங்கத்தைத் தவிர வேறு பிரதிஷ்டை ஒன்றுமின்றி அமைத்துக் காட்டியிருக்கின்றனர் நமது முன்னோர்கள்.

சிவலிங்கத்தில் பிரம்ப, விஷ்ணு, சிவபாகங்கள் ஆகிய மூன்றும் அமைந திருப்பதாகும். சிவலிங்கம் மூன்று கூறுகளுடையன. அடிப்பாகம் நாற்கோண வடிவாய் பூமிக்கு அதிபதியான, சிருஷ்டிகர்த்தாவான பிரம்ம பாகத்தை உணர்த்துவதாகும்.

மத்திய பாகம் எட்டுப்பட்டமுடைய அட்டகோண வடிவமாய் வாமை, சேஷ்டை, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூததமனி என்னும் மகா விஷ்ணுவின் எட்டுச் சக்திகளும், அதனோடு பொருந்த இருக்கும் ஆவுடை எனப்படும் மனோன்மணியாகிய ஒன்பதாவது சக்தியும் சேர்ந்து மகாவிஷ்ணுவின் நவசக்திகளாகி நீருக்கு அதிபதியான காத்தல் எனப்படும் ஸ்திதி - கர்த்தரான விஷ்ணு பாகத்தை உணர்த்துவதாகும். அரன் என்பதன் பெண்பாலே அரி என்பதாகும், அதனாலேயே "அரியல்லால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்று திருநாவுக்கரசர் அருளியிருக்கின்றார்.

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஸ்ரீமந நாராயணனைக் கண்டவர்கள் ஐவர். அவர்களெல்லாம் அருளியிருக்கிற பாடல்களில் அரனின் உருவத்தை முதலிலே அருளியே, அரியின் உருவத்தைப் பின்னர் குறிப்பிட்டுள்ளார்கள். வலப்பாகம் ஆண்பாகம், இடப்பாகம் பெண்பாகம். அதனை வலியுறுத்தியே திருமங்கையாழ்வார் -

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" என்று அரன் உருவம், அரியின் உருவத்தில் வலப்பாகத்தில் இருப்பதாகக் கூறுகின்றார். அதனால் தான் நமது அப்பனாகிய சிவபெருமானது இடப்பாகம் நமது அம்மையாக விளங்கும் மகாவிஷ்ணுவின் பாகமாகவும், மாதொருபாகன், உமா மகேஸ்வரன் அர்த்தநாரி, சங்கரநாராயணன் என்ற ஆணும் பெண்ணும் சேர்ந்த அபூர்வ மூர்த்தங்களாகவும் அமைந்து திகழ்கின்றன.

அதற்கு மேலுள்ள பாகம் நெருப்பிற்கு அதிபதியும், அழித்தல் எனப்படும் சம்ஹாரம், மறைத்தல் எனப்படும் திரௌபவம், அருளல் எனப்படும் அனுக்ரஹம் ஆகிய முத்தொழில்களுக்கும் அதிபதியாகிய சிவபாகமாகும். பூமிக்கு அதிபதியான பிரம்மா பூமிக்குள் மறைந்து ஒடுங்கி நிற்கும். நீருக்கு அதிபதியான விஷ்




ணுபாகம் அபிஷேக நீரைத்தாங்கி விரிந்து நிற்கும். நெருப்புக்கு அதிபதியான சிவபாகம் மேலோங்கி ஜோதி போன்று ஜொலித்துக் கொண்டிருக்கும். இம்மூன்றும் சேர்ந்து அருவமும், உருவமும் அற்ற ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி வடிவே சிவலிங்கம் ஆகும்.

ஆகவே சிவலிங்கத்தை வழிபட்டால் பிரம்மாவை வழிபட்ட பலனும், மகாவிஷ்ணுவின் பத்துத் திரு அவதாரங்களை வழிபட்ட பலனும், சிவபெருமானின் இருபத்தைந்து திருமூர்த்தங்களை வழிபட்ட பலனும் ஒருங்கே கிடைக்கக்கூடியதாகவும் இருக்கின்றதென்பதை வேதாகமங்கள் வலியுறுத்துகின்றன. புராண இதிகாசங்களும், அனுபூதிமான்களது அனுபவங்களும் அந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

பாவங்களில் எல்லாம் மிகவும் கொடியது பிரம்மஹத்திதோஷம் எனப்படும் மனிதரைக் கொன்ற கொலைப் பாவம். அதை நீக்க வேண்டுமானால் தனியாக எந்த மூர்த்தியையும் வழிபட்டு நீக்கிக்கொள்ள முடியாது என்பது வேதாகம விதி. அதை நீக்க வேண்டுமானால் சிவலிங்க பூஜையே செய்தாக வேண்டும். அதனாலேயே திருவிளையாடல் புராணத்தில் பஞ்ச மாபாதகம் செய்தவனுக்கும் மதுரை மீனாஷி சுந்தரேஸ்வரர், அவரது பாவங்களை மன்னித்து நற்கதி கொடுத்ததாகக் காண்கிறோம்.

காஞ்சிபுரத்தில், அம்மையார் சதா சிவலிங்க பூஜை செய்து கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களும் சிவ பூஜா துரந்தரர்களாக இருக்க, அருச்சுனன் சிவபெருமானிடமிருந்து பாசுபதம் பெறுவதற்கு விசேஷத்தவம் புரிந்தது யாவரும் அறிந்ததே. கந்தபுராணத்தில் சூர சம்ஹாரத்திற்குப் பிறகு ஸ்ரீ சுப்பிரமண்யப் பெருமான் திருச்செந்தூரில் சிவபூஜை செய்து கொண்டிருப்பதைக் காணலாம். கஜமுகாசூரனை சம்ஹாரம் செய்த பிறகு ஸ்ரீ விநாயகப் பெருமான் திருச்செங்காட்டக்குடியில் சிவலிங்க பூஜை செய்து கொண்டிருப்பதைக் காணலாம்.

இராமாயணத்தில் இராவண சம்ஹாரத்திற்குப் பிறகு ஸ்ரீ இராமபிரான் இராமேஸ்வரத்தில் இராமநாதரை சிவலிங்கத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றியதும், ஹநுமார் தனியாகக் காசியிலிருந்து இலிங்கம் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து வழிபாடாற்றியதும் காணலாம். மேலுலகத்தில் அதிகாரம் பெற்ற சகலருமே சிவபூஜை செய்த அவ்வப்பதவிகளைப் பெற்றிருப்பதாக நமது நாயன்மார்களும், மாணிக்க வாசகரும் அருளிச் செய்திருக்கின்றார்கள். ஆதலால் எப்பேர்ப்பட்ட பாவமானாலும் நீங்க வேண்டுமானால் சிவலிங்க பூஜை செய்ய வேண்டும். மேலான பதவிகள் பெறவேண்டுமானாலும் சிவலிங்க பூஜை செய்தாக வேண்டும்.

***கவிமாமணி காரை.எம்.பி.அருளானந்தன்.***

# ஈராக்கின் இரசாயன ஆயுதம் ஐ.நாவால் இன்று ஆராய்வு!


பரிசோதனைக்குழுத் தலைவர் ஹான்ஸ்

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்ஸில்- ஈராக் அழிவுதரும் இரசாயன ஆயுதங்களைத் தம்வசம் வைத்திருக்கின்றதா எனப் பரிசோதனை செய்யச் செல்லும் பொருட்டு இன்று கூடி இறுதி முடிவு எடுக்கவுள்ளது.

கடந்த இரு மாதங்களாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்ஸில் ஆயுதப் பரிசோதனையாளர்களை அனுப்புவது சம்பந்தமான பிரேரணைகளைத் தயாரித்து வந்த போதும், இன்று விவாதிக்கப்படும் பிரேரணை இதில் மூன்றாவதாகும். முதலிரு பிரேரணைகள் - ஈராக் ஆயுதப் பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பு வழங்காதவிடத்து அதற்கு எதிராக இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்வதற்குத் தன்னிச்சையான அதிகாரத்தை அமெரிக்காவிற்கு வழங்கியிருந்தது. ஆனால் தன்னிச்சையாக அமெரிக்கா, ஈராக் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது என பிரான்ஸும் ரஷ்யாவும் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததைத் தொடர்ந்து கடந்த 8 நாட்களாக மூன்றாவது பிரேரணை தயாரிக்கப்பட்டு இன்று இறுதியாக விவாதிக்கப்படுகின்றது.

இந்த மூன்றாவது பிரேரணை தன்னிச்சையாக அமெரிக்கா இராணுவ நடவடிக்கையினை ஈராக் மீது எடுப்பதனை மட்டுப்படுத்துவதோடு பிரான்ஸும் ரஷ்யாவும் மூன்றாவது பிரேரணையை வரவேற்றுள்ளன.

அதேவேளை - முதல் இரு தடவைகள் வரையப்பட்டதைவிட மூன்றாவது முறையாக வரையப்பட்ட பிரேரணை தெளிவாகவும் கருத்து மயக்கமற்றதாகவும் இருப்பதாகப் பிரான்ஸ் நாட்டுத் தலைவர் ஷெராக், ரஷ்ய நாட்டுத் தலைவர் புட்டினுக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதனையாளர்களுக்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளதாகப் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.


அழிக்கப்படும் ஆயுதங்கள்

# அமெரிக்க ஜெட் விமானங்கள் ஈராக் மீது போர்ப் பயிற்சி!

(நியூயோர்க்)

வளைகுடாவில் தங்கி நிற்கும் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ்.ஏபிரகாம் லிங்கனிலிருந்து புறப்படும் கடற்படை விமானங்கள் ஈராக் மீது கண்காணிப்புப் பயிற்சியில் ஈடுபட்டுவருவதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கிறது. ஈராக்கின் விமான நிலையங்கள், கட்டுப்பாட்டுக் கோபுரங்கள், மற்றும் இராணுவ நிலைகள் மீது அமெரிக்க ஜெட் விமானங்கள் பறந்து செல்கின்றன.

ஈராக் மீதான யுத்தம் மூளும் பட்சத்தில் இவற்றை இனங்கண்டு இலகுவாக தாக்குவதற்கு வசதியாகவே இப்பறப்புப் பயிற்சி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


குறிவைக்கப்படும் சதாமின் மாளிகை

அத்துடன் யுத்தப்பிரதேசத்தை விமானிகளுக்குப் பாச்சயப்படுத்தவும் இது உதவும் எனக் கப்பலின் கப்டன் கூறியுள்ளார்.

குண்டுகள் போடப்பட வேண்டிய இலக்குகள் லேசர் கதிர்களால் குறி பார்க்கப்பட்ட போதும் குண்டுகள் போடப்படாமல் பயிற்சி நடைபெறுகிறது.

இப்பயிற்சிகள் காட்சிகளாகப் பதியப்பட்டு விமானிகள் பதியப்பட்டவற்றை பார்வையிட்டுத் தம்மை திருத்திக்கொள்ள வழி செய்யப்படுகிறது.

## பாலித்தீவு குண்டுவெடிப்பு

# 4ஆவது சந்தேகநபரின் படம் பொலிஸாரால் வெளியீடு

பாலித்தீவுகளின் குண்டு வெடிப்புக்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் நான்காவது நபரின் புகைப்படம் ஒன்றை இந்தோனேசிய பொலிஸ் வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம், பாலித்தீவில் இரவு விடுதியில் நடைபெற்ற குண்டுவெடிப்பினால் 180இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பதுடன் கொல்லப்பட்டவர்களில் அவுஸ்திரேலிய உல்லாசப்பயணிகளே அதிகமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபர் தொடர்பாக இந்தோனேசியாப் பொலிஸார் கருத்து வெளியிடுகையில், குறிப்பிட்ட நபர் நேரடியாகக் குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர் எனக் குறிப்பிடவில்லை.


சந்தேக நபர்

எனினும், சந்தேகநபர் மேற்படி பாலித்தீவுக் குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்றும் விரைவில் மேற்படி நபர் விசாரணைகளின் பின்பு குற்றச் சந்தேகநபராக மாறலாம் எனவும் தெரியவருகிறது.

# லிக்குயிட் கட்சித் தலைமை இழுபறி நிலை தொடர்கிறது!

இஸ்ரேலில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள இந்நிலையில் லிக்குயிட் கட்சிக்குள் ஏரியல் ஷரோனிற்கும் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவிற்கும் இடையில் லிக்குயிட் கட்சியின் தலைமைப் பதவி தொடர்பாக பலத்த போட்டி நிலவுகின்றது.


நெத்தன்யாகு

இஸ்ரேலின் இடதுசாரிக் கட்சியான மிஸ்ஸத் கட்சி கொண்டு வநத நம்பிக்கையில்லா பிரேரனையை எதிர்கொள்வதற்காக ஏரியல் ஷரோன தனது பலத்த போட்டியாளரான நெத்தன்யாகுவைத் தனது அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டது மட்டுமல்லாது, நெத்தன்யாகுவின் கோரிக்கைக்கு ஏற்ப வெளிவிவகார அமைச்சுப் பதவியையும் அவருக்குக் கொடுக்கவேண்டிய நிலைக்கு ஏரியல் ஷரோன் தள்ளப்பட்டிருந்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஷரோன் மூன்று வாக்குகளால் வெற்றி பெற்றுக் கொண்டதும், புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்து தனது பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

இந்நிலையில் பாராளுமன்றக் குழு எதிர்வரும் ஜனவரி மாதம் 28ஆம் திகதி பெரும்பாலும் தேர்தல் திகதியாக நிர்ணயிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

அதேவேளை - பொதுத்தேர்தல் மூலம் புதிய அரசாங்கம் அமையும் வரையுள்ள காபந்து வலதுசாரி கூட்டமைப்பிற்கு நெதத்ன்யாகுவே பொறுப்பாகவுள்ளார்.




# சீன ஜனாதிபதி ஜியாங் பதவி விலகிச் செல்கிறார்

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 16 ஆவது மாநாடு தியன்மென் சதுக்கத்தின் மக்கள் மாநாடு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது. 2000 இற்கும் அதிகமான பிரதிநிதிகள் சீனாவுக்கான புதிய தலைவர்களைத் தெரிவுசெய்யவுள்ளனர்.

76 வயதான ஜனாதிபதி ஜியாங் செமின் தனது பதவியைத் துறக்கவுள்ளார். இவ்வாறு 70வயதுக்கு மேற்பட்ட அனைத்துத் தலைவர்களும் தமது பதவியை கைவிடுகின்றனர். இளம் சந்ததிக்கு இடமளிக்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. மாநாட்டில் இன்று ஜியாங் செமின் உரையாற்றவுள்ளார்.


## யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு நமது ஈழநாட்டின் இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு

'நமது ஈழநாடு'

ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக

'நமது ஈழநாடு'

*267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
- தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்

சனசமூக நிலையத்தின் பெயர் : ....................

பதிவு இலக்கம் : ....................

முகவரி : ....................

நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை

இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர் : ....................

.................... தலைவர்/ செயலாளர் ஒப்பம்

.................... திகதி

## உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்கள் நமது ஈழநாட்டில்!

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!

உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் மூன்றினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!

உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும், புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.

வாழ்க வளமுடன்!



சிறாரின் பெயர் : ....................

முகவரி : ....................

பிறந்த ஆண்டு : ....................

கூப்பன்கள் மூன்றும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

.................... பெற்றார் ஒப்பம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பிரிட்டிஷ் பாராளுமன்ற குழு தலைவர் நோஸ்பி பிரபு புதனன்று யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய பாராளுமன்ற அனைத்துக் கட்சிக்குழுவின் இணைத் தலைவர் நோஸ்பி பிரபு எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

வெளியுறவுத் துறை அமைச்சர் டிரோன் பெர்னான்டோவின் அழைப்பின் பேரில் அடுத்த கிழமை இலங்கை வரவிருக்கும் பிரித்தானிய பாராளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் இணைத்தலைவர் நோஸ்பி பிரபு தனது இலங்கை விஜயத்தின் ஓர் அங்கமாகவே புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணம் வரும் இவர் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களையும், அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புக்களையும் சந்திப்பதுடன் தற்போது புனரமைக்கப்பட்டுள்ள யாழ். பொதுசன நூலகத்தையும் பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## துரித கதியில் புனரமைக்கப்படும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம்



(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் உள்ள மாவீரர் துயிலும் இல்லம் மிகவும் துரிதமாக புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டின் மாவீரர் நாள் நிகழ்வுகளை இத் துயிலும் இல்லத்திலும் அனுஷ்டிக்கும் வகையில் மிகவும் துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகிறது. மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட இடங்களில் நினைவுக்கற்கள் நாட்டப்பட்டு நினைவுத் தூபியும் அமைக்கப்பட்டு வருகிறது.

மேற்படி துயிலும் இல்லத்தைச் சூழ பாதுகாப்பு மதில்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அழகுத்தாவரங்கள் நாட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ள தாக தெரியவருகிறது. மேற்படி புனரமைப்புப் பணிகளில் அதிகளவு தொழிலாளர்கள் ஈடுபட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

(க,லி)

## தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு 171 பேர் அனுமதி

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு புதிதாக 171 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி நெறிகள் கடந்த 1ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## வணிகர் கழகம் பேரணிக்கு ஆதரவு

இன்று நடைபெறும் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான கண்டனப் பேரணிக்கு யாழ்ப்பாண வணிகர் கழகம் மற்றும் இந்து சமயப் பேரவை என்பன தமது ஆதரவைத் தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

# புதிதாக 8 அமைச்சர்கள் நியமனமாவார்கள்!

(கொழும்பு நிருபர்)

ஐ.தே.மு.அரசாங்கத்தில் புதிதாக எட்டு அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர். ஏழு கருத்திட்ட அமைச்சர்கள் மற்றும் ஒரு பிரதி அமைச்சரை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எட்டு அமைச்சர்களின் பெயர்ப் பட்டியல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சராக றஞ்சித் மத்தும பண்டார, காணி மற்றும் உறுதி அமைச்சராக லக்கி ஜெயவர்த்தன, நெற்செய்கைத்துறை அமைச்சராக டி.எம். பண்டாரநாயக்க, வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மற்றும் சேமநலன் அமைச்சராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, விவசாயத் தொழிற்துறை அமைச்சராக ஹேமகுமார நாணயக்கார, அவசர சேவைகள் தொடர்பான அமைச்சராக சரத் சந்திர ராஜகருண, விஞ்ஞான தொழில நுட்பத்துறை அமைச்சராக கேலியரம்புக்வெல ஆகியோர் கருத்திட்ட அமைச்சர்களாக நியமிக்கப்படுவதற்கும்,

ஜெயசுந்தர விஜயகோனை வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார பிரதி அமைச்சராகவும் நியமிக்குமாறு அரசாங்கம் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்துள்ளது.

இதேவேளை- தற்போது கருத்திட்ட அமைச்சர்களாக உள்ள லக்ஷ்மன் செனிவிரட்ண, ரவீந்திர சமரவீர ஆகியோரை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்குமாறும் அரசாங்கம் பரிந்துரை செய்துள்ளது.

புதிய அமைச்சர்கள் பதவி யேற்றதும் தற்போதைய ஐ.தே.மு. அமைச்சர்களின் தொகை 70 ஆக உயரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவிலும் கண்டனப் பேரணி

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு நீதிமன்றம் 200 வருட சிறைத்தண்டனை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவிலும் இன்று கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்டப் பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

# பருத்தித்துறை மாணவர் கைது மாணவர் அமைப்புகள் கண்டனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்வத்தை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன கண்டித்துள்ளன.

மேலும் சில மாணவர்களை கைது செய்ய பொலிஸார் முயற்சிபதாவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்களை அமுல்படுத்தக் கோரி அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வெகுஜனப் போராட்டத்தில் பங்குபற்றியமைக்காகவே மேற்படி நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் ஒன்றியத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

## அரசியல்...

நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பாக மட்டுமன்றி ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

(01)

## புலிகளில்..

இங்கேயே தங்கியிருக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். இவரைப் புலிகள், நேற்றிரவு 10 மணியளவில் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி சமர மிலிந்த பலாகொடவிடம் ஒப்படைத்தனர்.

(03)

## தீர்ப்பை உடன்...

இத்தகைய செய்தி தமிழ்மக்கள் மனதிலே அச்சத்தினை ஊட்டுவதாக அமைகின்றது. அதேவேளையில் அரச படைகள் செய்த படுகொலைகள் எந்த நீதிமன்றும் ஏறாமலிருப்பதைக் கண்டு மிகுந்த வேதனையும் ஏமாற்றமும் அடைகிறோம்.

நாகர்கோயிலில் ஒரு பாடசாலையில் பிஞ்சு மாணவக் குழந்தைகள் துடிதுடித்துச் சாவைத் தழுவும்படி குண்டு வீசிய விமானத்தை ஏவியவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது? கிருசாந்தி என்னும் மாணவி சீருடையிலே சென்றபோது அவளையும் அவள் குடும்பத்தினரையும் படுகொலை செய்தவர்களுக்கு என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது? தமிழ் மாணவர்களை கல்வி கற்க முடியாதபடி பாடசாலைகளையெல்லாம் குண்டு வீசி அழித்தவர்கள் தண்டிக்கப்பட்டார்களா? இவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இத்தகைய பாரதூரமான தீர்ப்பு இநத வேளையிலே வழங்குவது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாகலாம். யாழ். மாவட்ட கல்விப்பேரவை இத்தீர்ப்பினையிட்டு மிகுந்த மனவேதனை அடைவதுடன், கடும் ஆட்சேபனையையும் தெரிவித்து, அத்தண்டனையை உடன் நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## வரவு...

துக்குள் இருந்து எடுத்தே தாக்கல் செய்யப்படும். ஆனால் இம்முறை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதன் ஒப்புதலை அரசாங்கம் பெற்றுள்ளது. இதனால் வரவு செலவுத்திட்டத்தின் இரகசியத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரபா மீதான...

சர்வதேச மட்டத்தில் தலைவர் பிரபாவின் அரசியல், இராணுவ, இராஜதந்திர நகர்வுகள் முக்கியத்துவம் பெற்றுவரும் இச்சூழ்நிலையில் கொழும்பு மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளி வந்துள்ளதால் தமிழினம் தமது விசனத்தை வெளிப்படுத்த இப்பேரணியைப் பயன்படுத்துமென யாழ்ப்பாணப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமிழினம் தமது ஆட்சேபத்தை சிங்கள தேசத்திற்குத் தெரிவிக்கவும், சர்வதேச சமூகத்திற்கு எமது உணர்வலைகளை வெளிப்படுத்தவும் இப்பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

வலிகாமம், தீவகம், தென்மராட்சி, வடமராட்சி போன்ற பகுதிகளில் இருந்துவரும் பொது மக்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்களை ஏற்றி வரும் வாகனங்கள் யாழ்.பிறவுண் வீதி வழியாக வருகை தருமாறு கோரப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் பேரணி-

பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ். அரச செயலகத்தைச் சென்றடையும்.

பிரதமருக்கு அனுப்பி வைப்பதற்காக மகஜர் ஒன்று யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

இதன் பிரதிகள் நீதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

இப்பேரணியூடாக தமது உணர்வலைகளை வெளிக்காட்ட தமிழ்மக்களை அலை அலையாகத் திரண்டு வருமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

## வரவு செலவுத் திட்ட வெளிப்பாடு

| | | | |
|---|---|---|---|
| அரசின் மொத்த வருமானம் | - | 33,900 | கோடி ரூபா |
| அரசின் மொத்த செலவு | - | 64,900 | கோடி ரூபா |
| துண்டு விழும் தொகை | - | 31,000 | கோடி ரூபா |

நேற்றைய பதிப்பில் ஏற்பட்ட அச்சாக்கத் தவறின் திருத்தம் இது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணயமாற்று விகிதங்களின் விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 96.11 | 96.57 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.95 | 151.30 |
| 1யூரோ | 96.19 | 97.34 |
| 1சுவிஸ் பிராங் | 65.64 | 66.67 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 53.87 | 54.86 |
| 1ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1சவூதி றியால் | 25.69 | 25.69 |

மக்கள் வங்கி
அனுசரணையுடன்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை
மாபெரும் கருத்தரங்கு - 2002
எதிர்வரும் 19ஆம் திகதி
காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்
என மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
இக் கருத்தரங்கில் பங்கு பற்றிப் பயனடைய, பரீட்சையில் தோற்றும் மாணவமணிகளை நாமும் வரவேற்கின்றோம்! வாழ்த்துகின்றோம்!!
அனுசரணை :-
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
மக்கள் வங்கியின்
மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்குகள்

இப்பத்திரிகை - இலக்கம் 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08-11-2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.